# லுனுகம்வெஹெர பிரதேச சபை

## ஹம்பாந்தோட்டை மாவட்டம்

---

## 01. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 ஜுலை 06 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2010 ஏப்ரல் 05 திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசீலனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட அதி உயர் தகவல்கள், விளக்கங்கள் என்பவற்றிற்கமையவும் லுனுகம்வெஹெர பிரதேச சபையின் 2010 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டின் போது முறையான கணக்குப் பதிவேடுகள் பேணப்பட்டுள்ளன என்றும் இவ்வறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் சுட்டிக் காட்டப்பட்டவாறான விடயங்களின் மூலம் நிதிசார் கூற்றுக்களில் ஏற்படும் தாக்கங்களைத் தவிர, 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான லுனுகம்வெஹெர பிரதேச சபையின், செயற்பாட்டு நிலவரத்தையும் அத்தினத்தில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் செயற்பாட்டு விடயங்களின் நிதிப் பெறுபேறுகள் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தோற்றும் விதத்தில் பொதுவாக அங்கீகரிக்கப்பட்ட கணக்கீட்டு தத்துவங் களுக்கேற்ப நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

(அ) கணக்கு பதிவு விடயங்களுக்காக பதிவு செய்திருந்த சில நாட்குறிப்புகளுடன் தொடர்புடைய கொடுக்கல் வாங்கல்களை இனங்காணக் கூடிய விதமான போதியளவு தகவல்கள் மற்றும் தொடர்பு விபரங்கள் காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட நிர்மாண வேலைகள் மற்றும் கொள்வனவுகளின் பெறுமதியாகிய ரூபா 582,281 தொகை குறிப்பிட்ட சொத்துக்கள் கணக்கில் வரவு வைத்து மூலதன ஈடுபடுத்தலுக்கு வருமானத்தின் பங்களிப்பு கணக்கிற்கு செலவு வைத்திருக்கவில்லை.

(இ) முன்னைய ஆண்டின் போது ஏற்பாடுகள் வழங்கியிருந்த 03 நிர்மாண வேலைக்காக ரூபா 1,420,843 தொகையொன்று மீளாய்வாண்டின் போது கிடைத்திருந்தது. அத் தொகையை இவ் ஆண்டின் மூலதன உதவியின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) ஓய்வூதியத் திணைக்களத்தில் இருந்து அனுப்பியிருந்த ஓய்வூதியப் பில்பத்திரத்தின் பிரகாரம், 2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய ரூபா 679,822 இற்கான

ஓய்வூதியப் பங்களிப்புத் தொகை ஐந்தொகையில் பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட்டிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட ரூபா 1,011,876 இற்கான செலவுகள் குறிப்பிட்ட செலவுத் தலைப்பிற்கு வரவு வைத்திருக்கவில்லை.

(ஊ) மீளாய்வாண்டின் போது 03 நிர்மாண வேலைகளுக்காக கிடைத்திருந்த ரூபா 744,510 தொகையினை குறிப்பிட்ட மூலதன உதவி வருமானத் தலைப்பின் கீழ் செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) சபைக்குச் சொந்தமான நீர் பவுஸருக்கு எரிபொருள் பெறுவதற்கு ரூபா 50,000 தொகையொன்று தென்மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் 2010 அக்டோபர் 08 திகதிய இலக்கம் 7220 பற்றுச் சீட்டின் பிரகாரம் கிடைத்திருந்தது. குறிப்பிட்ட தொகையை குறிப்பிட்ட வருமானக் கணக்கிற்கு செலவு வைக்காமல் வழங்கள் மற்றும் உபகரணங்கள் (103) கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டமையால் வருடத்திற்கான வருமானச் செலவு குறைவாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

---

கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 05 கணக்கு விடயங்கள் தொடர்பாக மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 3,171,644 ஆக காணப்பட்டதுடன் துணைப் பதிவேடுகளின் பிரகாரம் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 3,212,359 ஆக காணப்பட்டமையால் வித்தியாசம் ரூபா 40,715 ஆகும்.

1.3.3 நீண்ட காலமாக நிலுவையாக காணப்பட்ட மீதிகள்

---

தீர்க்கப்படாமல் மற்றும் அறவிடப்படாமல் ஐந்து வருடத்திற்கு மிகையான காலம் முதல் தொடர்ந்தும் கணக்குகளில் முன் கொண்டு வரும் ரூபா 3,686 இற்கான வரவு மற்றும் ரூபா 150,000 இற்கான செலவு மீதிகளைத் தீர்ப்பதற்காக மீளாய்வாண்டிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

1.3.4 செலுத்த வேண்டிய கணக்குகள்

---

2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 01 வருட காலத்தை விஞ்சிய செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 461,265 ஆகும்.

1.3.5 இணக்கமின்மைகள்

---

மீளாய்வாண்டின் போது ரூபா 306,141 தொகையொன்று செலவிடப்பட்டு பண்டங்கள் மற்றும் சேவைகள் பெற்றுக் கொள்ளும் போது 1988 பிரதேச சபை விதி (நிதி மற்றும் நிருவாக) இலக்கம் 178(7)(2) மற்றும் 178(7)(4) ஏற்பாடுகளின் பிரகாரம் இரகசியத் தன்மை பேணப்படக் கூடிய விதமாக கூறுவிலை பெறப்பட்டிருக்கவில்லை. அத்துடன் கூறுவிலைகள் தொடர் இலக்கம் குறிப்பிடப்பட்டு கூறுவிலைகள் திறக்கும் அலுவலரினால் அக் கூறுவிலைகள் சிறு கையொப்பம் மற்றும் திறக்கப்பட்ட திகதி குறிப்பிடப்பட வேண்டும். எனினும் அவ்வாறு செய்திருக்கவில்லை.

## 02. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 353,384 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,115,293 ஆக காணப்பட்டது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதீப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

| | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|
| வருமான விடயம் | மதிப்பீடு | உள்ள வாறான | திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரண்ட நிலுவை | மதிப்பீடு | உள்ள வாறான | திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரண்ட நிலுவை |
| | ரூபா 000' | ரூபா 000' | ரூபா 000' | ரூபா 000' | ரூபா 000' | ரூபா 000' |
| வாடகை | 222 | 214 | 09 | 171 | 149 | 29 |
| எழுத்தாணைக் கட்டணம் மற்றும் தண்டப் பணம் | 1,211 | 63 | 1,148 | 1,315 | 252 | 1,066 |

#### 2.2.2 நீதி மன்றத் தண்டப் பணம்

பல்வேறு கட்டளைச் சட்டங்களின் கீழ் நீதிவான் நீதிமன்றத்தினால் 2010 திசெம்பர் 31 திகதி வரை அறவிடப்பட்டு பிரதான செயலாளருக்கு அனுப்பியிருந்த ரூபா 1,147,705 தொகையான நீதி மன்றத் தண்டப் பணம் சபைக்கு கிடைக்க வேண்டியிருந்தது.

2.3 செலவினக் கட்டமைப்பு

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான சபையின் பாதீட்டு மற்றும் உள்ளவாறான செலவு உரிய முரண்களுடன் கீழே தரப்பட்டுள்ளன.

| செலவு விடயம் | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|
| மீண்டுவரும் செலவுகள் | பாதிடப்பட்ட | உள்ளவாறான | முரண் | பாதிடப்பட்ட | உள்ளவாறான | முரண் |
| | ரூபா. '000 | ரூபா. '000 | ரூபா. '000 | ரூபா. '000 | ரூபா. '000 | ரூபா. '000 |
| ஆளுக்குரிய வேதனம் | 6,229 | 5,586 | 643 | 6,134 | 5,236 | 898 |
| ஏனையவை | 1,855 | 2,076 | (221) | 1,482 | 1,570 | (88) |
| உப கூட்டுத் தொகை | 8,084 | 7,662 | 422 | 7,616 | 6,806 | 810 |
| மூலதன செலவுகள் | 25,000 | 4,543 | 20,457 | 13,166 | 18,337 | (5,171) |
| மொத்தக் கூட்டுத் தொகை | 33,084 | 12,205 | 20,879 | 20,782 | 25,143 | (4,361) |

2.6 மனித வள முகாமைத்துவம்

(அ) அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணிகள்

2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணிகள் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| ஊழியர் தரம் | அங்கீகரிக்கப்பட்டவை | உள்ளபடியானவை |
|---|---|---|
| பதவிநிலைத்தரம் | 01 | - |
| இரண்டாரம் தரம் | 04 | 02 |
| ஆரம்ப தரம் | 08 | 03 |
| ஏனையவை(அமைய, தற்காலிக) | - | 02 |

(ஆ) 2006 ஏப்ரல் 10, 2006 மே 10, 2006 ஆகஸ்ட் 01 திகதிகளைக் கொண்ட முகாமைத்துவ சேவை சுற்று நிருப இலக்கம் 28, 28(i), 28(ii) இன் பிரகாரம் முறையான அங்கீகாரம் ஒன்றினை பெற்றுக் கொள்ளாமல் சபையினால் அமைய மற்றும் தற்காலிக ஊழியர் இருவர் சேர்க்கப்பட்டு சேவையில் ஈடுபடுத்தியிருந்தனர்.

## 2.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 2.5.1 கிடைக்க வேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 1,326,616 ஆகக் காணப்பட்டதுடன் 01 வருட காலத்தை விஞ்சிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 212,483 ஆகும்.

### 2.5.2 அறவிடப்பட வேண்டிய பதவியணிக் கடன்

2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த பதவியணிக் கடன் முற்பண மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 855,734 ஆகும்.

## 2.6 செயற்பாட்டுத் திறமையின்மை

(அ) திஸ்ஸமஹாராம தேசிய சேமிப்பு வங்கியின் கணக்கு இலக்கம் 1-0097-01-73444 கொண்ட பொதுச் சேமிப்பு கணக்கில் 06 மாதங்களுக்கு மிகையான காலம் ரூபா 1,000,000 ஐ விட மிகையான தொகையொன்று காணப்பட்ட போதும் முறையான அங்கீகாரம் ஒன்றின் மூலம் அவற்றை சபைக்கு வருமானத்தை ஈட்டக் கூடிய விதமாக முதலீடு செய்வது தொடர்பாக கவனம் செலுத்தியிருக்கவில்லை.

(ஆ) சபையின் அதிகாரப் பிரதேசத்தில் பொருத்தப்பட்டிருந்த சுமார் 900 வீதி விளக்குகளை பராமரிப்பதற்காக 2010 ஆண்டின் போது ரூபா 410,400 தொகை ஒன்று செலவிடப்பட்டிருந்தது. அங்கீகரிக்கப்பட்ட இடங்களில் பொருத்தப்பட்ட வீதி விளக்குகளின் பராமரிப்பு செலவு இலங்கை மின்சார சபையில் இருந்து மீளளிப்புச் செய்ய இயலும் எனினும், அத் தொகையை மீளளிப்புச் செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) சபையினால் பேணப்பட வேண்டிய ஆவணங்கள் மற்றும் 03 பதிவேடுகள் என்பன பேணப்பட்டிருக்கவில்லை.

## 2.7 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

ஏதேனும் ஒரு அலுவலரினால் சம்பளத்திற்கு மிகையான படிகள் பெற்றுக் கொள்ளும் போது அதற்காக தாபனச் கோவையின் அத்தியாயம் ix பிரிவு 1.2 இன் பிரகாரம் தாபனப் பணிப்பாளரின் அங்கீரத்தை பெற வேண்டும். அத்துடன் உள்ளூராட்சி ஊழியர்கள் தொடர்பாக கௌரவ ஆளனரின் அங்கீகாரம் பெறப்பட வேண்டும். எனினும் அவ்வாறு இல்லாமல் சபையின் ஊழியர் 06 பேரினால் 2009 ஆண்டின் போது ஜாத்திக சவிய பாதை அபிவிருத்தி செயற்திட்டதின் கீழ் நிருவாகச் செலவுகளில் இருந்து ரூபா 25,100 தொகையொன்று படியாக பெறப்பட்டுள்ளது.

2.8 அகக் கணக்காய்வு

சபையில் போதியளவு அகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

03. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(ஈ) களஞ்சியக் கட்டுப்பாடு